தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா. 44 நாள் 13.08.2026

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | த/பெ. | கிருபாசமுத்திரம் |
| வயது | 59 | தொழில் | SB Medical |
| கிராமம் | சிறுபுலியூர் | தாலுக்கா | [illegible] |

**( எதிரி ஆஜர்,).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறுபுலியூரில் வசித்து வருகிறேன். நான் கொல்லுமாங்குடியில் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். நான் M.A.,B.Ed., படித்துள்ளேன். எதிரிகளை தெரியும். 2011–2012ம் வருடம் நாளிதழில் ஒரு விளம்பரம் வெளிவந்தது. அதில் செல்வராஜ் என்பவர் குத்தாலத்தில் National Board of Alternative Medicine என்ற பெயரில் இன்ஸ்டியூட் நடத்தி வருவதாக குறிப்பிட்டிருந்தது. நான் அதற்கு பிறகு நேரில் சென்று செல்வராஜை பார்த்தேன். நான் நேரில் ரூ.12,000/– செல்வராஜ் என்பவரிடம் செலுத்தி மேற்படி இன்ஸ்டியூட்–ல் சேர்ந்தேன். மேற்படி கோர்சில் சேர்ந்தால் பிராக்டிஸ் செய்யலாம் என்று செல்வராஜ் சொன்னார். சனி, ஞாயிறுகளில் சுமார் 8 வகுப்புகளுக்கு சென்றேன். இரண்டு வருடம் கழித்து, எனக்கு MDAM என்ற சான்றிதழை செல்வராஜ் நேரில் கொடுத்தார். நான் பணம் செலுத்தியதற்கு எவ்வித இரசீதும் கொடுக்கவில்லை. 2020 அல்லது 2021–ம் வஎன்னிடம் காண்பிக்கப்படும் Diploma in CMS Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ. 71** ஆகும். என்னிடம் காட்டப்படும் Rurla Social Worker Diploma Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ்**அ.சா.ஆ. 72** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் Practical Training Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ.73** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் Provisional Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அது **அ.சா.ஆ.74** ஆகும். எனக்கு வழங்கிய மதிப்பெண் சான்றிதழ் **அ.சா.ஆ.75** ஆகும். தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு **அ.சா.ஆ.76** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.ருடம் செல்வராஜை சரியான அங்கீகாரம்

K Siva

இல்லாமல் மேற்படி இன்ஸ்டியூட் நடத்தியதாக போலிசார் விசாரணை செய்ததை நாளிதழ் மூலம் தெரிந்துகொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் MD(A.M) எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ. 77** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் தனிப்பட்ட புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/8/20

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா. 43 நாள் 13.08.2026

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ்பாபு | த/பெ. | சம்மந்தம் |
| வயது | 60 | தொழில் | MEDICAL SHOP |
| கிராமம் | பேரளம் | தாலுக்கா | நன்னிலம் |

**( எதிரி ஆஜர்,).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பேரளத்தில் வசித்து வருகிறேன். நான் பூந்தோட்டத்தில் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். நான் Diploma in Pharmacy படித்துள்ளேன். எதிரிகளை தெரியும். 2010-ம் வருடம் நாளிதழில் ஒரு விளம்பரம் வெளிவந்தது. அதில் செல்வராஜ் என்பவர் குத்தாலத்தில் National Board of Alternative Medicine என்ற பெயரில் இன்ஸ்டியூட் நடத்தி வருவதாக குறிப்பிட்டிருந்தது. மயிலாடுதுறையை சேர்ந்த அழகப்பன் என்பவர் என்னிடம் மேற்படி இன்ஸ்டியூட்டில் 6 மாதம் படித்தால் பிராக்டிஸ் செய்யலாம் என்று சொன்னார். நான் அதற்கு பிறகு நேரில் சென்று செல்வராஜை பார்த்தேன். நான் நேரில் ரூ.25,000/- செல்வராஜ் என்பவரிடம் செலுத்தி மேற்படி இன்ஸ்டியூட்-ல் சேர்ந்தேன். ஆறு மாதம் பயிற்சிற்கு பிறகு எனக்கு CMS என்ற சான்றிதழ் தபால் மூலம் வந்தது. நான் பணம் செலுத்தியதற்கு எவ்வித இரசீதும் கொடுக்கவில்லை. நான் 15 வகுப்புகளுக்கு சென்றேன். 2014-ம் ஆண்டு எனக்கு சான்றிதழ் கொடுக்கப்பட்டது. 2022-ம் ஆண்டு மேற்படி சான்றிதழ்கள் போலியானவை என்பது எனக்கு தெரியவந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் Diploma in CMS Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ. 71** ஆகும். என்னிடம் காட்டப்படும் Rurla Social Worker Diploma Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ்**அ.சா.ஆ. 72** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் Practical Training Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ.73** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் Provisional Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அது **அ.சா.ஆ.74** ஆகும். எனக்கு வழங்கிய

C S. Ramesh

மதிப்பெண் சான்றிதழ் **அ.சா.ஆ.75** ஆகும். தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு **அ.சா.ஆ.76** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எனக்கு 2022-ம் வருடம் பேப்பரில் பார்த்த பிறகும், போலிசார் விசாரித்த பிறகும் எனக்கு வழங்கப்பட்டது போலி சான்றிதழ் என தெரிந்துகொண்டேன். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலிசார் சொன்னதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :-

S. Ramesh

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/8/24

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா. 45 நாள் 13.08.2026

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | த/பெ. | ராஜாங்கம் |
| வயது | 56 | தொழில் | மெடிக்கல் ஷாப் |
| கிராமம் | பூந்தோட்டம் | தாலுக்கா | நன்னிலம் |

**( எதிரி ஆஜர்.).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பூந்தோட்டத்தில் வசித்து வருகிறேன். நான் பூந்தோட்டத்தில் மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன். நான் B.A., படித்துள்ளேன். எதிரிகளை தெரியும். மேற்படி எதிரிகளை எனக்கு அழகப்பன் மூலம் தெரியும். 2011−2012ம் வருடம் செல்வராஜ் என்பவர் குத்தாலத்தில் National Board of Alternative Medicine என்ற பெயரில் இன்ஸ்டியூட் நடத்தி வருவதாக கேள்விப்பட்டு, நான் அதற்கு பிறகு நேரில் சென்று செல்வராஜை பார்த்தேன். அவர் Alternative Medicine படித்தால் Diploma in CMS certificate தருகிறேன், மேலும் தமிழ்நாடு அரசிதழில் பதிவு செய்து தருகிறேன் என்று சொன்னார். நான் ரூ.25,000/− செல்வராஜ் என்பவரிடம் செலுத்தி மேற்படி இன்ஸ்டியூட்டில் சேர்ந்தேன். நான் வாரத்தில் இரண்டு நாட்கள் என்று சுமார் 15 நாட்கள் வகுப்புகளுக்கு சென்றேன். ஆறு மாதம் கழித்து எனக்கு தபால் மூலம் சான்றிதழ் கிடைக்கப்பெற்றது. நான் பணம் செலுத்தியதற்கு எவ்வித இரசீதும் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் Diploma in CMS Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ. 78** ஆகும். என்னிடம் காட்டப்படும் Rurla Social Worker Diploma Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ. 79** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் Practical Training Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ.80** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் Provisional Certificate எனக்கு வழங்கப்பட்டதுதான். அது **அ.சா.ஆ.81** ஆகும். எனக்கு வழங்கிய மதிப்பெண் சான்றிதழ் **அ.சா.ஆ.82** ஆகும்.

தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு **அ.சா.ஆ.83** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் தனிப்பட்ட புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/8/20

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.